பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**08 11 2025 SATURDAY 6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சியுடன் பாரம்பரியத்தை பாதுகாக்க அரசு முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி தொடங்க உள்ளதாக மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

3. விபத்து மற்றும் அவசர சிகிச்சை வழங்குவதில் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. தென்தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டுவென்டி - டிவென்டி கிரிக்கெட் போட்டித்தொடரை இந்தியா கைப்பற்றியது.

---- இனி விரிவான செய்திகள் ----

<<<<<>>>>>>

வளர்ச்சியுடன் பாரம்பரியத்தை பாதுகாக்க அரசு முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருவதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பீகார் மாநிலம் **Sitamarhi-**ல் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், வாக்கு வங்கி அரசியலில் கவனம் செலுத்தாமல் மக்கள் நலனில் அக்கறைகொண்டு பிஜேபி செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

நாட்டில் கடந்த **11** ஆண்டுகளில் அனைத்துத்துறைகளிலும் பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் பாரம்பரிய சின்னங்கள் பாதுகாக்கப்படுவதுடன், இழந்தவை மீட்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<<>>>>>>

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி தொடங்க உள்ளதாக மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த கூட்டத்தொடர் அடுத்த மாதம் 19-ஆம் தேதிவரை நடைபெறும் என்று கூறியுள்ளார்.

இக்கூட்டத்தொடர் ஆக்கப்பூர்வமாக அமையும் என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் வகையிலும், ஜனநாயகத்தை வலுப்படுத்தும் வகையிலும் குளிர்கால கூட்டத்தொடர் அமர்வுகள் அமையும் என்று திரு கிரண் ரிஜிஜு குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>>

விபத்து மற்றும் அவசர சிகிச்சை வழங்குவதில் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

பத்திரிகையாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாமை மாநில அமைச்சர்கள் திரு சாமிநாதன், திரு மா. சுப்பிரமணியன், திரு சேகர்பாபு ஆகியோர் சென்னையில் இன்று தொடங்கிவைத்தனர்.

இந்நிகழ்ச்சியின்போது, விபத்து மற்றும் அவசர சிகிச்சை தொடர்பான Taei Registry 2.0 என்ற செயலியும் தொடங்கிவைக்கப்பட்டது.

இதுகுறித்து மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் அவசர சிகிச்சை பிரிவு விரிவாக்கம் செய்யப்பட்டு நவீன வசதிகளுடன் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது தொடங்கிவைக்கப்பட்டுள்ள புதிய செயலி, அவசர சிகிச்சையின் தரத்தை மேம்படுத்தவும், மேலும் சிறப்பாக சிகிச்சை வழங்கவும் வழிவகுக்கும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளில் ஆறாயிரத்து **453** மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக மாநில உணவு அமைச்சர் திரு சக்ரபாணி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கேழ்வரகு கொள்முதல் திட்டம் மாநிலத்தில் முதல்கட்டமாக தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும், இரண்டாவது கட்டமாக ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டதாக கூறியுள்ளார்.

இத்திட்டத்தில் **3** ஆயிரத்து **578** விவசாயிகள் பயனடைந்துள்ளதாகவும், அவர்களுக்கு **26** கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு சக்ரபாணி தெரிவித்துள்ளர்.

<<<<<>>>>>>

**Ernakulam — Bangaluru** இடையேயான வந்தேபாரத் ரயில் சேவை உட்பட நான்கு வழித்தடங்களில் வந்தே பாரத் ரயில்களை பிரதமர் திரு நரேந்திர மோடி, வாரணாசியில் இன்று காணொலி வாயிலாக தொடங்கிவைத்தார்.

புதிதாக தொடங்கப்பட்டுள்ள எர்ணாகுளம் — பெங்களூரு இடையிலான ரயில் தமிழகத்தின் கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம் நகரங்கள் வழியாக இயக்கப்படுகிறது.

இந்த ரயில்சேவை மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என்று கோவையை சேர்ந்த பயணி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Voice Byte —பயணி - 29 Sec. )***

<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இன்று லோசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், தென் மாவட்டங்களின் சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று கூறினார்.

***(Voice Byte — செந்தாமரை கண்ணன் - 48 Sec.)***

<<<<<>>>>>>

விடுதலை போராட்ட வீரர் பகவான் பிர்சா முண்டாவின் **150-** ஆவது ஆண்டு பிறந்த தினத்தை முன்னிட்டு, பழங்குடியினர் நலத்துறை சார்பில் சேலத்தில் சிறப்புத் திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சி நடைபெற்றது.

தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் நடத்தப்படும் இப்பயிற்சி பழங்குடியின மாணவ, மாணவிகளுக்கு பெரிதும் பயனுள்ளதாக உள்ளது என்று பழங்குடியினர் நலத்துறையை சேர்ந்த அதிகாரி திரு தியாகராஜன் தெரிவித்தார்.

***(Voice Byte -தியாகராஜன் — 20 Sec. )***

இதன்மூலம் தாங்கள் பெரிதும் பயனடைந்துள்ளதாக இதில் பங்கேற்ற மாணவ, மாணவியர் தெரிவித்தனர்.

**(Voice Byte —** மாணவர்கள் **- 38 Sec. )**

<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

வீரமாமுனிவர் பிறந்த தினத்தையொட்டி, சென்னை காமராஜர் சாலையில் உள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மாநில அமைச்சர்கள்

திரு சாமிநாதன் மற்றும் திரு சேகர்பாபு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

--------------

நாமக்கல் மாவட்டம் நாமகிரிபேட்டையில் நடைபெற்ற மருத்துவ முகாமை மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் ஆய்வு செய்தார்.

----------------

மதுரை மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ள உலக்கோப்பை ஜுனியர் ஹாக்கிப் போட்டிக்கான முன்னேற்பாட்டுப்பணிகள் குறித்து ஆட்சியர் திரு பிரவீன் ஆய்வு மேற்கொண்டார்.

---------------------

வந்தே மாதரம் பாடலின் 150-ஆவது ஆண்டு விழாவையொட்டி கும்பகோணத்தில் தேசிய மாணவர் படை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாணவர்கள் மரக்கன்றுகளை நட்டனர்.

------------------

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் போதைபொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

-----------------

அரியலூரில் நடைபெற்ற மாரத்தான் போட்டியில் மாணவர்கள், பொதுமக்கள், காவல்துறையினர் என ஏராளமானோர் ஆர்வமுடன் பங்கேற்றனர்.

-------------- ராம்குமார்

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் கார் பள்ளத்தில் கவிழ்ந்து நேரிட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். இரண்டு பேர் காயமடைந்தனர்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டுவென்டி - டிவென்டி கிரிக்கெட் போட்டித்தொடரை இந்தியா கைப்பற்றியது.

பிரிஸ்பெயினில் இன்று நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா **4** புள்ளி ஐந்து ஓவரில், விக்கெட் இழப்பின்றி **52** ரன் எடுத்திருந்த நிலையில், மழை குறுக்கிட்டதால் ஆட்டம் கைவிடப்பட்டது.

இதையடுத்து, ஐந்து போட்டிகளை கொண்ட தொடரில் இரண்டு ஆட்டங்கள் மழையால் கைவிடப்பட்ட நிலையில், இந்தியா **2-1** என்ற ஆட்டக்கணக்கில் தொடரை கைப்பற்றியது.

<<<<<>>>>>>

**உலக துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ரவீந்தர் சிங் தங்கப்பதக்கம் வென்றார்.**

**<<<<<END>>>>>>**